இனிமையான குழந்தைகளே ! மாயைக்கு உங்களை ஓங்கி அறைந்து விடுவதற்கான வாய்ப்பு கிடைத்து விடும் வகையில் அப்பேர்ப்பட்ட எந்த தவறும் செய்யாதீர்கள். ஒரு வேளை ஸ்ரீமத் படி நடக்கவில்லை என்றால் மாயை ஓங்கி அறைந்து முகத்தைத் திருப்பி விடும்.

கேள்வி: சூரிய வம்ச இராஜ்யத்தில் ஏர்கண்டிஷன் டிக்கெட் பெறுவதற்கான ஆதாரம் என்ன? அது யாருக்கு பிராப்தி ஆகிறது.

பதில்: சூரிய வம்ச இராஜ்யத்தில் ஏர்கண்டிஷன் டிக்கெட் பெற வேண்டும் என்றால் ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத் படி நடக்க வேண்டி இருக்கும். தங்களது அனைத்தையும் தந்தை மீது அர்ப்பணம் செய்ய வேண்டி இருக்கும். யார் முழுமையாக அர்ப்பணம் ஆகிறார்களோ, அவர் களே செல்வந்தர் ஆகிறார்கள். சூரிய வம்ச இராஜதானி என்பது ஏர்கண்டிஷன் ஆகும். சூரிய வம்ச பதவியை அடைவதே உங்களது இலட்சியம், நோக்கம் ஆகும். மற்றபடி வரிசைக் கிரமமான பதவிகளோ இருக்கவே இருக்கின்றன.

பாடல்: அவர் மிகவும் மகிழ்ச்சி என்ற அதிர்ஷ்டம் உடையவர்...

ஓம் சாந்தி. இந்த பாடலின் பொருளை பிராமண குல பூஷண குழந்தைகளாகிய நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் பிராமண சம்பிரதாயம் ஆவீர்கள். பின் தெய்வீக சம்பிரதாயத்தினர் ஆவீர்கள். எல்லையில்லாத தந்தை முன்னால் இருக்கும் பொழுது, அவரிடமிருந்து எல்லையில்லாத ஆஸ்தி கிடைத்து கொண்டிருக்கும் பொழுது, இனி வேறு என்ன வேண்டும் என்று குழந்தைகளுக்கு தந்தை அமர்ந்து புரிய வைக்கிறார். பக்தி மார்க்கம் எப்பொழுது முதல் நடக்கிறது என்பது கூட யாருக்குமே தெரியாது. பக்தி மார்க்கத்தின் பக்தர்கள் பகவானை அல்லது மணமகள்கள் மணமகனை நினைவு செய்கிறார்கள். ஆனால் அதிசயம் என்னவென்றால் தந்தையை அறியாமல் உள்ளார் கள். இது போல எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? மணமகள் மணமகனை தெரியாமல் இருக்கிறார் என்றால் நினைவு எப்படி செய்ய முடியும்? பகவானோ அனைவரின் தந்தை ஆகிறார். குழந்தைகள் தந்தையை நினைவு செய்கிறார்கள். ஆனால் அறிமுகம் இன்றி நினைவு செய்வது எல்லாமே வீண் ஆகும். எனவே நினைவு செய்வதால் எந்தவொரு இலாபமும் ஏற்படுவது இல்லை. நினைவு செய்து செய்து யாருமே அந்த இலட்சிய நோக்கத்தை அடைவது இல்லை. பகவான் யார், அவரிடமிருந்து என்ன கிடைக்கும். எதுவுமே அறியாமல் உள்ளார்கள். இத்தனை தர்மங்கள் உள்ளன. கிறிஸ்து, புத்தர் ஆகிய குருமார்கள் அல்லது தர்ம ஸ்தாபனை செய்பவர்களை அவர்களது சீடர்கள் நினைவு செய்கிறார்கள். ஆனால் அவர்களை நினைவு செய்வதால் நமக்கு என்ன கிடைக்கப் போகிறது - எதுவுமே தெரியாது. இதை விட உலகியல் படிப்பு நல்லது ஆகும். இலட்சியம் நோக்கமோ புத்தியில் இருக்கிறது அல்லவா? தந்தையிடமிருந்து என்ன கிடைக்கிறது, ஆசிரியரிடமிருந்து என்ன கிடைக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. குருவிடமிருந்து என்ன கிடைக்கிறது என்பது யாருமே புரிந்து கொள்ள முடியாமல் உள்ளார்கள். இப்பொழுது நாம் தந்தை யினுடையவராக ஆகி உள்ளோம் என்று குழந்தைகளாகிய உங்களுக்கு நிச்சயம் ஆகி உள்ளது. பாபா நம்மை 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வந்தது போலவே வந்து சொர்க்கத்தின்

அதிபதியாக ஆக்குகிறார் அல்லது சாந்தி தாமத்திற்கு அதிபதியாக ஆக்குகிறார். செல்லமான குழந்தைகளே! நீங்கள் என்னிடமிருந்து உங்களது ஆஸ்தியை எடுப்பீர்கள் தானே என்று தந்தை கேட்கிறார். ஆம், பாபா ஏன் எடுக்க மாட்டோம் என்று எல்லாரும் கூறுகிறார்கள். நல்லது. சந்திர வம்சத்தின் இராமருடைய பதவியை அடைவதில் திருப்தி அடைவீர்களா? உங்களுக்கு என்ன வேண்டும்? தந்தை பரிசை எடுத்துக் கொண்டு வந்துள்ளார். நீங்கள் சூரிய வம்ச இலட்சுமியை வரம் முடிப்பீர்களா, இல்லை சந்திர வம்ச சீதையையா? இராமரின் பூசாரி கிருஷ்ணரின் பெயரை கேட்க விரும்புவதில்லை. இராமரை திரேதாவிலும், கிருஷ்ணரை துவாபரத்திலும் எடுத்து சென்றுள்ளார்கள். அவர்கள் இராமர் பெரியவர் என்று நினைக்கிறார்கள். இதனால் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு விடுகிறது. எப்படி சிறிய குழந்தைகளுக்குள் சண்டை ஏற்படுகிறது அல்லவா?

தந்தை அமர்ந்து புரிய வைக்கிறார் - மிகச் சரியாக எப்படி முந்தைய கல்பத்தில் புரிய வைத்திருந்தாரோ அவ்வாறே மீண்டும் புரிய வைத்து கொண்டிருக்கிறார். நீங்கள் மீண்டும் வந்து ஆஸ்தி எடுத்துக் கொண்டிருக் கிறீர்கள். எல்லையில்லாத ஆஸ்தி எடுப்பது தான் உங்களுடைய இலட்சியம் நோக்கம் ஆகும். அது சூரியவம்ச இராஜ்ய பதவி ஆகும். இரண்டாவது பதவி வரிசை சந்திரவம்சத்தினுடையது ஆகும். எப்படி ஏர் கண்டிஷன்-ஐ விட உயர்ந்ததோ எதுவும் இருப்பதில்லை. ஏர்கண்டிஷன், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று இருக்கிறது அல்லவா? எனவே சத்யுகத்தின் முழு இராஜதானியும் ஏர்கண்டிஷன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். பிறகு இருப்பது முதல் வகுப்பு. எனவே நீங்கள் ஏர் கண்டிஷனின் சூரியவம்ச இராஜ்யம் பெறுவீர்களா, இல்லை சந்திரவம்ச முதல் வகுப்பினுடையதா என்று தந்தை கேட்கிறார். அதை விடக் குறைவாக பிறகு இரண்டாம் வகுப்பில் வரிசைக்கிரமமாக வாரிசு ஆகுங்கள். பின் நீங்கள் பின்னால் பின்னால் வந்து ஆட்சி பெறுவீர்கள், இல்லை என்றால் மூன்றாம் வகுப்பு பிரஜை. பிறகு அதில் கூட டிக்கெட் ரிஸர்வ் (ஒதுக்கீடு) ஆகிறது. முதல் வகுப்பு ஒதுக்கீடு, இரண்டாம் வகுப்பு ஒதுக்கீடு - வரிசைக்கிரமமான வகுப்புக்களோ இருக்கும் அல்லவா? சுகமோ அங்கு இருக்கவே இருக்கும். மற்றபடி (கம்பார்ட்மெண்ட்) அறைகளோ தனி தனியாக இருக்கும். பணக்கார மனிதர்கள் ஏர்கண்டிஷன் டிக்கெட் எடுப்பார்கள். உங்களில் யார் பணக்காரர் ஆகிறார்? யார் எல்லாவற்றையும் தந்தைக்கு கொடுத்து விடுகிறார்களோ - பாபா இவை அனைத்தும் உங்களுடையது ஆகும். பாரதத்தில் தான் மகிமை பாடப்பட்டுள்ளது. வியாபாரி, இரத்தினங்களை அளிப்பவர், மந்திரவாதி இவை அனைத்தும் தந்தையினுடைய மகிமையே அன்றி கிருஷ்ணரினுடையது அல்ல. கிருஷ்ணரோ ஆஸ்தி எடுத்தார். சத்யுகத்தில் பிராப்தியை அடைந்தார். அவரும் தந்தையினுடையவர் ஆனார். பிராப்தியை எங்கிருந்தாவது அமைத் திருக்கக்கூடும் அல்லவா? பாரதத்தின் மகிமை நிறைய உள்ளது. பாரதம் போன்ற உயர்ந்த தேசம் வேறு எதுவும் இருக்க முடியாது. பாரதம் தான் பரமபிதா பரமாத்மாவின் ஜென்மபூமி ஆகும். இந்த இரகசியம் யாருடைய புத்தியிலும் பதிவதில்லை. பரமாத்மா தான் அனைவருக் கும் அரைகல்பத்திற்காக சுகம், சாந்தி அளிக்கிறார். பாரதம் முதல் நம்பர் தீர்த்தம் ஆகும். ஆனால் கீதையில் கிருஷ்ணர் பெயரை போட்டு விட்டுள்ளார்கள். எனவே இவரது பதவி குறைந்து போய் விட்டது. இல்லையென்றால் எல்லா மனிதர்களும் அந்த தந்தையைத் தான் ஏற்று கொண்டு இருந்திருப்பார்கள். மேலும் வேறு யார் மீதும் மலர் மாலை

அணிவித்திருக்க மாட்டார்கள். அனைவரினுடைய பதீத பாவனர் தந்தை ஆவார். அவரினுடை யது சோமநாத் கோவில் ஆகும். சிவனிடம் தான் அனைவரும் வந்து தலை வணங்குகிறார்கள். ஆனால் நாடகப்படி ஒரு தந்தையை மறந்து விட்டால் சிருஷ்டியின் நிலைமை எப்படி ஆகி விடுகிறது. எனவே சிவபாபா வருகிறார். யாராவது கருவியாக ஆகிறார்கள் அல்லவா? இப்பொழுது அசரீரி ஆவீர்களாக என்று தந்தை கூறுகிறார். தங்களை ஆத்மா என்று நிச்சயம் செய்யுங்கள்.ஆத்மாவாகிய நான் யாருடைய குழந்தை ஆவேன் என்பது யாருக்குமே தெரியாது. அதிசயம் ஆகும் அல்லவா? ஓ! காட்ஃபாதர் கருணை காட்டுங்கள் என்று கூறவும் செய் கிறார்கள். சிவஜெயந்தி கூட கொண்டாடு கிறார்கள். ஆனால் அவர் எப்பொழுது வந்திருந் தார் என்பது யாருக்குமே தெரியாது. இது 5 ஆயிரம் வருடங்களின் விஷயம் ஆகும். தந்தை தான் வந்து புதிய உலகமான சத்யுகத்தை ஸ்தாபனை செய்கிறார். சத்யுகத்தின் ஆயுள் இலட்சக் கணக்கான வருடங்களோ கிடையாது.

தந்தை குழந்தைகளுக்கு எவ்வளவு சுலபமாக புரிய வைக்கிறார் - நினைவு மட்டும் செய்யுங்கள், இல்லறத்தில் இருந்தபடியே தாமரை மலர் போல ஆகுங்கள். விஷ்ணுவிற்கு தான் எல்லா அலங்காரங்களும் கொடுத்துள்ளார்கள். சங்கும் கொடுத்துள்ளார்கள், தாமரை மலரும் கொடுத்துள்ளார்கள். உண்மையில் தேவதைகளுக்கு இந்த அலங்காரங்கள் கொடுக்கப் படுகிறதா என்ன? இது எவ்வளவு இரகசியங்கள் நிறைந்த ஆழமான விஷயங்கள் ஆகும். உண்மையில் பிராமணர்களின் அலங்காரம் ஆகும். ஆனால் பிராமணர்களுக்கு எப்படி கொடுப்பது. இன்றைக்கு பிராமணர்களாக இருக்கிறார்கள், நாளைக்கு சூத்திரர்களாக ஆகி விடுகிறார்கள். பிரம்மா குமாரரிலிருந்து சூத்திர குமாரர் ஆகி விடுகிறார்கள். மாயை தாமதிப்ப தில்லை. ஒரு வேளை யாராவது தவறு செய்தார்கள், தந்தையின் ஸ்ரீமத்படி நடக்க வில்லை, புத்தி கெட்டு விட்டது என்றால் மாயை நல்ல வகையில் ஓங்கி அறைந்து முகத்தைத் திருப்பி விடுகிறது. மனிதர்கள் கோபத்தில் வந்து ஓங்கி அறைந்து முகத்தை திருப்பி விடுவேன் என்று கூறுகிறார்கள் அல்லவா? எனவே மாயை கூட அவ்வாறே உள்ளது. தந்தையை மறந்தீர்கள் என்றால் மாயை ஒரு நொடியில் ஓங்கி அறைந்து முகத்தைத் திருப்பி விட்டு விடுகிறது. எப்படி ஒரு நொடியில் ஜீவன் முக்தி பெறுகிறார்கள், அது போல ஒரு நொடியில் ஜீவன் முக்தியை இல்லாமல் செய்து விடுகிறார்கள். எவ்வளவு நல்ல நல்லவர்களை மாயை பிடித்துக் கொண்டு விடுகிறது. இவர்கள் எங்காவது கவன மின்மையில் இருக்கிறார்கள் என்பதை பார்க்கும் பொழுது சட்டென்று ஓங்கி அறைந்து விட்டு விடுகிறது. தந்தையோ குழந்தைகளின் முகத்தை பழைய உலகத்திலிருந்து திருப்பி புது உலகம் பக்கம் இருக்குமாறு செய்கிறார்.

லௌகீக தந்தை யாராவது ஏழையாக இருக்கிறார் என்றால் பழைய குடிசையில் இருப்பார். பிறகு புதிய வீட்டை அமைக்கும் பொழுது அவ்வளவே, இப்பொழுது புதிய வீடு தயாராகும், நாங்கள் போய் அமருவோம் என்பது குழந்தைகளின் புத்தியில் அமர்ந்து விடுகிறது. இந்த பழையதை இடித்து விடுவோம். உங்களுக்காக கூட இப்பொழுது தந்தை உள்ளங்கையில் சொர்க்கத்தை கொண்டு வந்துள்ளார் அல்லது வைகுண்டத்தை எடுத்து வந்துள்ளார். செல்லமான குழந்தைகளே.... என்று கூறுகிறார். ஆத்மாக்களிடம் உரையாடு கின்றார். இந்தக் கண்களால் குழந்தைகளாகிய உங்களை பார்த்து கொண்டும்

இருக்கிறார். காஷ்மீரில் பிராமணர் கள் நிறைய பேர் இருக்கிறார்கள். சிரார்த்தம் ஆகியவை கூட செய்து அங்கு உணவளிக் கிறார்கள். பிராமணருக்குள் ஆத்மாவை அழைக்கிறார்கள். இவை அனைத்தும் சாட்சாத்காரத் தின் (காட்சிகள் தெரிதல்) இரகசியம் வைக்கப் பட்டுள்ளது. அப்படி இன்றி ஆத்மா ஒருவரிட மிருந்து வெளியேறி வருகிறது என்பதல்ல. தங்களை விட பெரியவர்களின் ஆத்மாவை அழைக் கிறார்கள். அவர்களுக்காக எல்லாமே தயாராக வைக்கிறார்கள். குறிப்பிட்ட இன்னாருடைய ஆத்மா வரப் போகிறது என்று புரிந்திருப்பார்கள். பிறகு அவரிடம் கேள்விகள் கூட கேட்பார்கள். முன்பெல்லாம் ஆத்மா பேசிக் கொண்டி ருந்தது. பிறகு நீங்கள் நலமாக இருக்கிறீர்களா என்று அவர்களிடம் கேட்பார்கள். அவரும் கூறுவார். இது கூட நாடகப்படி நடக்கிறது. நான் இந்த குறிப்பிட்ட வீட்டில் பிறவி எடுத்துள்ளேன் என்று சில சமயங்களில் கூறவும் செய்கிறார்கள். இவை எல்லாமே சாட்சாத் காரத்தின் வழி முறைகள் நாடகத்தில் அமைந்துள்ளது. அது மீண்டும் நடைபெறுகிறது. மற்றபடி ஆத்மா ஒன்றும் வருவது இல்லை. முன்பெல்லாம் (டேபிள்) மேஜை மீது கூட அழைத்து கொண்டிருந்தார்கள். பாபாவிற்கு எல்லா அனுபவங்களும் இருக்கின்றது. இப்பொழுது மேஜை மீதோ ஆத்மா வர முடியாது. யார் என்ன செய்தாரோ அது நாடகத்தில் இருந்தது. எனவே ஆகியது. நாடகத்தை எவ்வளவு நல்லமுறையில் பிடித்து கொள்ள வேண்டி இருக்கிறது. போக் - பிரசாதம் படைக்கப்படுகிறது. ஆத்மா அழைக்கப் படுகிறது. இவை அனைத்தும் நாடகத்தில் பொருந்தி உள்ளது. இதில் சந்தேகத்தின் எந்த விஷயமும் கிடையாது. புதிய மனிதர்கள் புரிந்து கொள்ளாத காரணத்தினால் குழம்பி விடு கிறார்கள். தந்தை மந்திரவாதியும் ஆவார் அல்லவா? நான் கூட நாடகத்திற்கு வசப்பட்டுள்ளேன் என்று புரிய வைக்கிறார். அப்படி இன்றி நாடகம் இல்லாமல் ஏதாவது என்னால் செய்ய முடியும் என்பதல்ல, இல்லை. குழந்தைகள் நோய்வாய்ப் படுகிறார்கள். அவர்களை குணப்படுத்தி விடுவேன். அறுவை சிகிச்சை செய்விப்பதிலிருந்து விடுவித்து விடுவேன் என்பதல்ல. வினைப் பயனையோ அனைவரும் அனுபவித்தே ஆக வேண்டும். உங்கள் மீதோ சுமை நிறைய உள்ளது. ஏனெனில் நீங்கள் எல்லாரையும் விட பழையவர்கள் ஆவீர்கள். சதோபிரதான நிலை யிலிருந்து ஒரேயடியாக தமோபிரதானமாக ஆகி விட்டுள்ளீர்கள்.

இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தை கிடைத்துள்ளார். எனவே தந்தை யிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும். கல்ப கல்பமாக நாம் நாடகப்படி தந்தையிடமிருந்து ஆஸ்தி எடுக்கிறோம். யார் சூரிய வம்ச, சந்திர வம்ச குடும்பத்தினராக இருப்பார்களோ அவர்கள் அவசியம் வருவார்கள். யார் தேவி தேவதைகளாக இருந்தார்களோ பிறகு சூத்திர ராக ஆகி உள்ளார்களோ பிறகு அவர்களே பிராமணர்களாக ஆகி தெய்வீக சம்பிரதாயத் தினராக ஆவார்கள். இந்த விஷயங்களை தந்தையைத் தவிர வேறு யாரும் புரிய வைக்க முடியாது. தந்தைக்கு குழந்தைகள் எவ்வளவு பிரியமானவர்களாக இருக்கிறார்கள். நீங்கள் அதே முந்தைய கல்பத்தினுடைய எனது குழந்தைகள் ஆவீர்கள் என்று கூறுகிறார். நான் கல்ப கல்பமாக வந்து உங்களுக்கு படிப்பிக்கிறேன். எவ்வளவு அதிசயமான விஷயங்கள் ஆகும். நிராகார பகவான் பேசுகிறார் (பகவானுவாக்கு) சரீரம் மூலமாகத் தான் பேசுவார் அல்லவா? சரீரம் தனியாக ஆகி விட்டால் பின் ஆத்மா வாச் - ஆத்மா பேச முடியாது. ஆத்மா பிரிந்து விடுகிறது. அசரீரி பவ என்று இப்பொழுது தந்தை கூறுகிறார். அப்படி இன்றி பிராணாயாமம் ஆகியவை

செய்வது என்பதல்ல, இல்லை. நான் ஆத்மா அவினாஷி ஆவேன் என்று புரிந்திருக்க வேண்டும். ஆத்மாவாகிய எனக்குள் 84 பிறவிகளின் பாகம் நிரம்பி உள்ளது. எனது ஆத்மா கூட என்ன செயல் புரிகிறதோ அந்த பாகம் முழுவதும் எனது ஆத்மாவில் நிரம்பி உள்ளது என்று சுயம் தந்தை கூறுகிறார். பக்தி மார்க்கத்தில் கூட அதே பார்ட் நடக்கிறது. ஒருவர் சாராயம் குடிக்கவே இல்லை என்றால் அதன் சுவை பற்றி எப்படி தெரிய வரும்? ஞானம் கூட எடுத்தால் தானே தெரிய வரும். ஞானத்தினால் சத்கதி ஆகிறது. நான் அனை வருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவேன் என்று தந்தை கூறுகிறார். சர்வோதயா லீடர்ஸ் இருக்கிறார்கள் அல்லவா? எவ்வளவு வித விதமாக இருக்கிறார்கள். உண்மையிலோ அனைவர் மீதும் தயை புரிபவர் தந்தை ஆவார் அல்லவா? ஹே பகவான், கருணை காட்டுங்கள் என்று எல்லாரும் கூறுகிறார்கள். உண்மையிலோ அனைவர் மீதும் தயை புரியவர் தந்தை ஆவார் அல்லவா? எல்லாருமே ஹே பகவான் கருணை புரியுங்கள் என்று கூறுகிறார்கள். எனவே அனைவர் மீதும் அவர் கருணை புரிகிறார். மற்ற அனைவருமே சுயத்தின் மீது கருணை புரிபவர்கள். தந்தையோ முழு உலகத்தை சதோபிரதானமாக ஆக்குகிறார். அதில் தத்துவங் களும் வந்து விடுகின்றன. இந்த காரியம் ஒரு பரமாத்மாவினுடையதே ஆகும். எனவே சர்வோதயா என்பதன் பொருள் எவ்வளவு பெரியது ஆகும். ஒரேயடியாக அனைவர் மீதும் கருணை புரிந்து விடுகிறார். சொர்க்கத்தின் ஸ்தாபனையில் யாருமே துக்கமுடையவராக இருப்பதில்லை. அங்கு முதல் தரமான வீட்டு சாமான்கள், வசதிகள் ஆகியவை கிடைக்கும். துக்கம் அளிக்கக் கூடிய மிருகங்கள், ஈக்கள், கொசுக்கள் ஆகியவை எதுவும் இருப்பதில்லை. இங்கு கூட பெரிய மனிதர்களின் வீடுகள் எவ்வளவு சுத்தமாக இருக்கின்றன. ஒரு பொழுதும் நீங்கள் அங்கு ஈக்கள் ஆகியவற்றை பார்க்க மாட்டீர்கள். ஒரு பொழுதும் கொசுக்கள் நுழைய முடியாது. சொர்க்கத்தில் இது போல அசுத்தம் செய்யக் கூடிய எந்தவொரு பொருளும் இருப்பதற்கான வலிமை கிடையாது, இல்லை. இயற்கையான மலர்கள் ஆகியவற்றின் நறுமணம் இருக்கும். உங்களுக்கு சூட்சும வதனத்தில் சிவபாபா ஸூபிரசம் (இனிப்பான பானகம்) கூட பருகுமாறு செய்விக்கிறார். இப்பொழுது சூட்சுமவதனத்திலோ ஒன்றும் இல்லை. இவை எல்லாம் சாட்சாத்காரம் (காட்சிகள் தெரிதல்) ஆகும். இங்கு அமர்ந்தபடியே நீங்கள் அனைத்து சாட்சாத்காரமும் செய்கிறீர்கள். பாடல் கூட மிகவும் முதல்தரமானது ஆகும். நமக்கு தந்தை கிடைத்துள்ளார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். வேறு என்ன வேண்டும்! எல்லையில்லாத தந்தையிடமிருந்து எல்லையில்லாத ஆஸ்தி பெறுகிறோம். எனவே தந்தையை நினைவு செய்ய வேண்டும். தந்தையின் வழி பிரசித்தமானது ஆகும். ஸ்ரீமத் மூலம் நாங்கள் சிறந்ததிலும் சிறந்தவர்களாக ஆகிடுவோம்.

இது காக்கை எச்சிலுக்கு சமானமான சுகம் ஆகும் என்று சந்நியாசிகள் கூறுகிறார்கள். ஆனால் சத்யுகத்தில் எப்பொழுதும் சுகம் இருந்தது என்பது அவர்களுக்கு தெரியாது. சிறிய வயதில் இவர்கள் இராதை கிருஷ்ணர் ஆவார்கள். இவர்களது சரித்திரம் ஆகியவை எதுவும் கிடையாது. சொர்க்கத்தில் குழந்தைகள் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள். புல்லாங்குழல் (முரளி) வாசித்து நடனம் ஆகியவை செய்து கொண்டு இருப்பார்கள் என்றாலும் கூட மற்றபடி ஞானத்தைக் கூற மாட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணருக்கு புல்லாங்குழல் கொடுத்து விட்டார்கள். பின் சரஸ்வதி எங்கே போனார்? சரஸ்வதிக்கோ வீணை

கொடுக்கிறார்கள். எனவே அவர் பெரியவர் ஆகிறார் அல்லவா? இவை எல்லாமே பக்தி மார்க்கம், பொம்மைகளின் விளையாட்டு ஆகும். தேவி தேவதைகளின் விக்கிரகங்களை அமைத்து பூஜை ஆகியவை செய்து பிறகு மூழ்கடித்து விடுகிறார்கள். இதன் மீது உங்களது ஒரு பாடல் கூட அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு குருட்டு நம்பிக்கை என்று கூறப்படுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஒவ்வொருவரும் இந்த நாடகத்திற்கு வசப்பட்டுள்ளார்கள். இந்த நாடகத்தின் எந்தவொரு காட்சியை பார்த்தும் சந்தேகம் எழுப்பக் கூடாது. நாடகத்தின் ஒவ்வொரு இரகசியத் தையும் நல்ல முறையில் புரிந்து கொண்டு ஆடாதவர்களாக இருக்க வேண்டும்.

2. தங்களை அவினாஷி ஆத்மா என்று உணர்ந்து இந்த சரீரத்திலிருந்து விடுபட்டு அசரீரி ஆவதற்கான அப்பியாசம் செய்ய வேண்டும்.து,

வரதானம் : செய்விப்பவரின் நினைவின் மூலம் மிகப்பெரிய செயலையும் நிமித்தமாகி சுலபமாக செய்பவர் ஆகுக

பாப்தாதா ஸ்தாபனை எனும் மிகப்பெரிய காரியத்தை தானே செய்விப்பவராகி நிமித்தமான குழந்தைகள் மூலம் செய்ய வைக்கின்றார். செய்பவர்-செய்விப்பவர் இந்த சொல்-ல் தந்தை மற்றும் குழந்தை இருவரும் இணைந்தே உள்ளனர். கைகள் குழந்தை களுடையது, செயல் தந்தையினுடையது. கை கொடுப்பதற்கான பொன்னான வாய்ப்பு குழந்தைகளுக்கே கிடைத்துள்ளது. ஆனால் செய்ய வைப்பவர் செய்ய வைத்துக் கொண்டி ருக்கின்றார். நிமித்த மாக்கி நடத்திச் செல்கின்றார். ஒவ்வொரு செய-லும் செய்விப்பவராக உடனிருக்கின்றார்.

சுலோகன்: வேண்டுபவராக இல்லாமல் சதா வேண்டியவராக இருப்பவரே ஞானி ஆத்மா ஆவார்.